මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/02 - 2021
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.06.30

**வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல.: 04/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
நியதிச்சட்ட சபைகள் தலைவர்கள்

**2022-ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பொதுச் செலவினங்களைச் செலவழித்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான அங்கீகாரம்**

2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் செலவினங்களை வரம்புகளுக்கு உட்பட்டுச் செய்யக்கூடிய வகையில், ஒருங்கிணைந்த நிதியில் இருந்து திரும்பப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பின் 150(1) விதியின் விதிகளின்படி நிதி அமைச்சர் பிடியாணைகளில் கையெழுத்திட்டுள்ளார். 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தால் ஒதுக்கப்பட்டது.

02. அதன்படி, 2022 ஜூலை 01 முதல் செப்டம்பர் 30 வரையிலான மூன்றாம் காலாண்டில் கட்டண வவுச்சர்கள் மற்றும் பிற ஆவணங்களில் தொடர்புடைய அதிகாரம் பின்வருமாறு குறிப்பிடப்பட வேண்டும்;

| | |
|---|---|
| அ) பொது அரசாங்க சேவை | - 2022 இன் 3 ஆம் இலக்க பொது ஆணைப்பத்திரம் |
| ஆ) விசேட சட்ட சேவை | - 2022 இன் 3 ஆம் இலக்க பொது ஆணைப்பத்திரம் |
| இ) முற்பணக் கணக்கு செயற்பாடு | - 2022 இன் 3 ஆம் இலக்க பொது ஆணைப்பத்திரம் |

03. இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய கொந்தளிப்பான சூழ்நிலையில் அந்நிய செலாவணியின் தேய்மானம் மற்றும் பணவீக்கம் அதிகரித்து வருவதன் விளைவாக பொதுச் செலவுகள் அதிகரித்து வருகின்றன. மேலும் வருவாய் குறைவாக இருப்பதால் வரவுசெலவுத்திட்ட அரசிறை ஏற்பாடு கணிசமாகக் குறைந்துள்ளது. எனவே, அரசாங்கச் செலவுகள் கடுமையான கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது.

04. தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 02/2022 இன் 03 மற்றும் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2021 இல் 04 முதல் 09 வரையிலான ஏற்பாடுகள் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்தும் ஏற்புடையதாக இருக்கும்.

05. அங்கீகரிக்கப்பட்ட காலாண்டு வரையறையினை விஞ்சும் வகையிலான கொடுப்பனவுக்கான கடப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளாதிருப்பது தொடர்பாக மிக அதிக கவனம்செலுத்த வேண்டியுள்ளது. திரட்டு நிதி கிடைக்காமை காரணமாக முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டில் கொடுப்பனவு செய்யமுடியாதுள்ள சிட்டைகளைத் தீர்ப்பது தொடர்பாக கவனம் செலுத்தி செலவினத்தினைத் திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

06. குறித்த செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், எந்தவொரு அர்ப்பனிப்பையும் செய்வதற்கு முன்னர் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட பதிவுகள் இருப்பதை உறுதிப்படுத்தாமல் எந்தவொரு நிதி அர்ப்பனிப்பிலும் ஈடுபடக்கூடாது.

**ஒப்பம்/**
**கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு